தமிழ்ப் பொழில்

கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ருச	திருவள்ளுவர் யாண்டு உயகக இரௌத்திரி புரட்டாசி 1980 செப்டம்பர் - அக்டோபர்	மலர் சா

தொல்காப்பிய மெய்ம்மயக்க மரபுகள்

பேராசிரியர் ச. பாலசுந்தரம் க. பு. கல்லூரி.

ஆசிரியர் தொல்காப்பியர் எழுத்துக்களின் இயல்பனைத்தையும் தம் நூலின் முதற்படலமாகிய எழுத்ததிகாரத்துள் யாவரும் எளிதின் உணரும் வண்ணம் ஒன்பது இயல்களாக வகுத்தமைத்துக் கூறுகின்றார். அவற்றுள் எழுத்துக்களின் இலக்கணத்தை அவர் வகைப்படுத்திக் கூறும் முறையாவது; பொதுவாக எழுத்துக்களின் தொகை அவற்றின் பெயர்—ஒளியளவு (உரு) சிலவற்றிற்கு வரி வடிவு அவை ஒலிக்கும் இயல்பு. அவை தம்முள் இணைந்தொலிக்கும் (மெய்ம்ம்யக்கம்) மரபு, பண்ணிசைக்கண் மிக்கொலிக்கும் நிலை அளவு பற்றியும்; சிறப்பாக மொழியைச் சார்ந்து தோன்றும் சார்பெழுத்துக்களின் இயல்பு — எழுத்துக்கள் மொழியாக்க முறுதல் — அசையின் பொருட்டுச் சில எழுத்தொலி நீளும் மரபு—தனிமொழிக்கண் முதல், இறுதிகளில் வரும் எழுத்துக்களின் மரபு பற்றியும் எழுத்துக்களின் பிறப்பியல்புகள், தனி மொழிகள் தம்முள் புணருங்காலை எழுத்துக்கள் எய்தும் இயல்புகள், அவை பொருளமைதிக்கேற்ப புணரும் முறைமை·சாரியைப் பேறு ஆகியவைபற்றியுமாம்- அவற்றுள் ஈண்டு நாம் ஆய்ந்து காண மேற்கொண்டது. எழுத்துக்கள் தம்முள் இணைந்தொலித்து நிற்கும் மெய்ம்மயக்க மரபுகளைப் பற்றியதாகும்.

முதற்கண் மெய்ம்மயக்கம் என்னும் இத்தொகைச் சொல்லின் பொருளைக் காண்போம்: மெய் என்பது ஒற்றெழுத்துக்களைக் குறிக்கும் மெய்யானது — ஒற்று — புள்ளி — உறுப்பு என்றும் ஆளப்பெறும். உயிர்மேவ இடமாக நிற்றலின் மெய்யென்பது காரணக் குறியீடாம் (மே—மேய்—மெய் என்பது இதன் வரலாறு) மயக்கம் என்பது ஒருமெய் தான் கெடாமல் தன்நிலை சிறிது திரியப் பிறி

தொன்றனோடு கலந்த நிலையைக் குறிக்கும். இதனைக் கூட்டம்கலப்பு, இணைப்பு முயக்கம் புணர்ச்சி என்று ஆளுப, இதன் அடிச்சொல் 'மாய்' என்பதாகும் (மாய் — மயல் — மயக்கு — மயக்கம் என்பது இதன் வரலாறு) இஃதொரு வினைப் பண்புச் சொல்லாகும்.

இனி ஆசிரியர் தொல்காப்பியர் எழுத்துக்களின் கூட்டத்தை மயக்கம் என்றும் புணர்ச்சி என்றும் தலைப்பிட்டுக் கூறுவர். அதனால் இச்சொற்களுக்கு உரியவாக இவர்கருதி உணர்த்துப் பொருளை வரைந்து காண்போம்.

பொதுவாக இருபொருள் தம்முட் கூடுவதனைப் புணர்ச்சி என்பர் ஆசிரியர். இதனை இயைபே புணர்ச்சி (உரிப-) என்னும் நூற்பாவால் அறியலாம். அதனான் இரு சொற்கள் தம்முட் கூடுவதனை

திறுத்த சொல்லே குறித்து வருகிளவி என்று
ஆயீரியல புணர்நிலைச் சுட்டே (எழுத்து: 107) என்றும்

மூன்றே திரிபிடன் ஒன்றே இயல்பென
ஆங்கந் நான்கே மொழி புணரியல்பே
(எழு — 108) என்றும்

அவர் கூறுவர் இவ்வாறு கூறுபவர், உயிரீற்றின் முன் நாற்கணமும் வந்து புணர்தலை உயிர் மயங்கியல் என்றும், புள்ளியீற்றின் முன் நாற்கணமும் வந்துணர்தலைப் புள்ளி மயங்கியல் என்றும் உறுகின்ரூர் மற்றுக் குற்றியலுகரம் நின்று நாற்கணத்தோடும் கூடுவதனைக் குற்றியலுகரப்புணரியல் என்று கூறுகின்ரூர். மேலும் சொல்லதிகாரத்துள் வேற்றுமைப் பொருளும் உருபும் மாறுபட்டியைதலை வேற்றுமை மயங்கியல் என்று தலைப்பிட்டுக் கூறுகின்ரூர். இவற்றைச் சிறிது ஆழ்ந்து நோக்கின், நிலைமொழியும் வருமொழியும் தம்முள் இணையுங்கால் பெரும்பாலும் நிலைமொழிச் செய்கைபற்றிய இலக்கணங் கூறும் இயலைப் புணரியல் என்றும்— வருமொழிச் செய்கை பற்றியும் இலக்கணங் கூறும் இயலை மயங்கியல் என்றும் இவர் பெயரிட்டுள்ளமை புலனுகும்.

ஆகவே நிலைமொழியோடு வருமொழி வந்து இயையுங்கால் வருமொழியின் முதல் எய்தும் நிலையை மயக்கம் என்றும், நிலைமொழி வருமொழியோடு இயையுங்கால் நிலைமொழியின் ஈறு எய்தும் நிலையைப் புணர்ச்சி என்றும் கொள்ளுதல் மரபாகின்றது. ஒரு பொருட் பன்மொழிகள் ஒவ்வொன்றும் தம்முள் நிமித்த வேறுபாடுடையவை என்பதை இதனானும் அறியலாம்.

இனி அகரமுதல்னகர மிறுவாய் எழுத்து முப்பஃதும் தம்முள் இணைந்து மொழிநிலைமை எய்துதற்கண், உயிரும் மெய்யும் (சார்பெழுத்துக்கள் இடத்தையும் பொருளையும் நோக்கி உயிராகவோ மெய்யாகவோ அடங்கிவிடும்) ஆகிய இவ் எழுத்துக்களின் இணைவை நான்குவகையாக பிரிக்கலாம் அவையாவன : 1 உயிரும் உயிரும் 2 மெய்யும் மெய்யும் — உயிரும் மெய்யும் — மெய்யும் உயிரும். என்பனவாம்:- இவ் இணைவுகளுள் மயக்கம் என்று கூறுதற்கேற்பவற்றைக் காண்போம்.

நூன்மரபினுட் கூறப்பெற்ற இம்முப்பஃது எழுத்துக்களுள் உயிரெழுத்துப் பன்னிரண்டும் நாத ஒலியோடு கூடிய உயிர்ப்பினால் தோன்றித் தனித்தியங்கும் தன்மையுடையனவாகும் மெய் யெழுததுப் பதினெட்டும் தனித்தியங்கும் ஆற்றலின்றி வாயுறுப் புக்கள் ஒற்றி நின்ற அளவில் உயிரெழுத்துக்களின் உந்துதலினால் அவற்றோடு வெளிப்பட்டுத் தோன்றியும் அல்—ஆல் என அவற்றின் பின்வந்தும் தம் ஒலியைப்புலப்படுத்தும் தன்மையுடையவாகும்.

இவற்றுள் உயிரெழுத்துக்கள் ஒருமொழியின் முதலிலும் இறுதியிலும் தனித்தும் மெய்யோடு கூடி மூன்றிடத்தும் (முதல் - இடை - கடை) வரும். மெய்யெழுத்துக்கள் உயிரோடு கூடி மொழி மூவிடத்தும், தனித்து மொழியிடையிலும் ஈற்றிலும் வரும். இவை மொழியாக்கம் பெறுங்கால் ஓரெழுத்தொருமொழி ஈரெழுத்தொரு மொழி—தொடர்மொழி என மூன்றுவகையாக ஆக்கம் பெறும் இவற் றுள் ஓரெழுத்து மொழி ஒரே எழுத்தலாவதாகலின் ஆண்டு மயக்கம் ஒன்றும் நிகழாது ஒற்று இடைநில்லாமையின் ஈரெழுத்து மொழிக் கண்ணும் இம்மயக்கம் நிகழாது; இரண்டிறந்திசைக்கும் தொடர் மொழிக்கண் மட்டுமேநிகழும்.

உயிரெழுத்துக்கள் தம்முள் மயங்கா ஏன் எனின்? அவை உயிர்ப்பொலியாகலின் தடையின்றித் தோன்றும். ஓரெழுத்துத் தோன்றி நிறைந்து முடிந்த பின்னர்தான் மற்றொருயிரெழுத்துத் தோன்றும். உயிரெழுத்துக்கள் தம்முள் தொடர நேரின் இடையே யகர வகரங்களை உடம்படு மெய்யாகப்பற்று அவற்றை ஊர்ந்து தொடரும். இன்றேல் தம்முள் இயையாமல் விட்டிசைக்கும். ஆதலின் உயிரும் உயிரும் கூடுங் கூட்டம் என்பதொன்றில்லை என் பது தெளிவாம்.

இனி மெய்யும் உயிரும் இணைந்தொலிப்பின் அவை ஓரெழுத் தாய் உயிர்மெய் என்னும் பெயர்பெற்று ஓரலகாய் நிகழும். ஒலிக்

குங்காலும் ஒற்றினது இயல்பும் உயிரினது ஒலியுமாக இணைந் தொலிக்கும் இதனை மெய்யின் வழியது உயிர் தோன்றும் நிலையே (நூன் மரபு 18) என்பார் ஆசிரியர். இவ்வாறு உயிரெழுத்து மெய் யோடு கூடிவரினும். தன் இயல்பு மாறுது நிகழும். இதனை மெய் யோடியையினும் உயிரியல் திரியா (நூன்மரபு 10) என்று கூறுவர் அவர். ஈண்டு உயிரியல்யென்பது மாத்திரை அளவை உயிரியல்பு திரியாதெனவே மெய்யியல்பு திரியும் என்பது பெறப்படும் அஃதா வது மெய்யின் மாத்திரை தோன்றுதொழியும். அஃதாவது மெய் உயிரோடு வெளிப்படுங்கால் அதற்கு மாத்திரை இல்லை என்க.

மற்று மெய்யின் அளவே அரையென மொழிப'' (எழு-11) என்றமையான் இவை குறிலோடும் நெடிலோடும் கூடி ஒலிக்குங் கால் அவ்வுயிர் மெய்கள் முறையே ஒன்றரை மாத்திரையும் இரண் டரை மாத்திரையும் பெறுதல் வேண்டுமே அவ்வாறு பெருமைக்குக் காரணம் யாதெனின்? கூறுதும்.

மெய்யெழுத்துக்கள் உயிர்ப்பொலி இல்லாதென ஆதலின் அவை தத்தம் பிறப்பிடத்தை ஒற்றி (பொருந்தி) நிற்கும் செவ்விக் கண் உயிர்ப்பொலியுடைய அகர முதலாய எழுத்துக்கள் வந்து உந்தினலன்றிஅவை வெளிப்படா. அகர முதலாயவை கண்டத் தினின்றும் தடையின்றிப் புறப்பட்டு வாய் அங்காத்தலும் வாயிதழ் விரிதலும், குவிதலும் ஆகிய செயலால் உருவம் விகாரப்பட்டு ஒலிக் கும் — உயிரெழுத்துக்கள் இவ்வாறு ஒலிக்குங்கால் அவை தனித்த உயிரெழுத்தாகும். ஏதாவது ஒரு மெய்யெழுத்தின் பிறம்பிடத்தைச் சார்ந்து அதனல் தடைப்பட்டு ஒலிப்பின் அம்மெய்யின் தன்மையும் உடன் செவிப்புலனுதலின் அந்நிலையில் அவை உயிர்மெய் எழுத் தெனப்படும் அவ்வாறு தடைப்படுத்திய மெய் அவ்வுயிரொலியோடு ஒருங்கிணைந்து வெளிப்படுதலின் அதற்கு மாத்திரை தேவைப்பட வில்லை. இதனை ஆசிரியர்.

புள்ளியில்லா எல்லா மெய்யும்
உருஉருவாகி அகரமோ டுயிர்த்தலும்
ஏனைஉயியோ டுருவுதிரிந் துயிர்த்தலும்
ஆயீரியல உயிர்த் தலாறே (எழுத்-17) உனக் கூறுவ

தனல் அறியலாம் (இந்நூற்பாவின் முதலடியில் புள்ளியிலவா என் னும் பாடம் 'புள்ளியில்லா' என வேறுபட்டுள்ளதைத் தனிக் கட்டு ரையில் விளக்குவேன்) இனி இந்நூற்பா உயிர்மெய்களின் வரிவடிவ இலக்கணங் கூறுவதாகவும் வரிவடிவு — ஒலிவடிவு இரண்டற்கும் இலக்கணங் கூறுவதாகவும் உரையாசிரியன்மார் திரியக்கருதி உரை கூறி மயக்கியுள்ளனர்.

இந்நூற்பா மெய்யெழுத்தின் ஒலிவடிவம் பற்றிய தென்பதை முறையாக நோக்கின் எளிதிற் புலனாகும்.

இவ் உயிர்மெய்யெழுத்தின்கண் உயிரெழுத்து நீங்கின் மெய் ஒலி தோன்றுமென்க. அவ்வாறாயின் ஆசிரியர்

மெய் உயிர் நீங்கின் தன்னுருவாகும் ( ) என்றதென்னையெனின்? அது புணர்மொழிக்கண் நிலைமொழி ஈற்றில் நின்ற மெய்யின் மேல் வருமொழி உயிரேறி ஒன்றுபட்டுப் புணரும் என்னும் விதி கூறிய பின்னர் அப்புணர்மொழியைப் பிரித்துப் பொருள் காணுங்கால் அவை உயிர்மெய்யாகிய ஓரெழுத்தாக நில்லாமல் புணர்தற்கு முன்னர் நின்றவாறு மெய் தன்னுருவம் தோன்றப் பிரிந்து நின்று பொருள்தரும் என மொழி புணர்நிலை பிரிநிலைபற்றி ஓதியதாகலின் அது தனியெழுத்தாகிய உயிர்மெய்யெழுத்துப் பற்றிய இலக்கணங் கூறியதன்று என்க.

இனி உயிர்மெய்யெழுத்தின் மெய்யொலி தோன்றுமாறுவது, பல்வேறு அளவுகளில் நீர் நிரப்பிய வள்ளங்களில் ஒருகுணிலைக் கொண்டு மோதுங்கால் வள்ளத்தினின்றும் வெளிப்படும் ஒலியானது அவ்வந் நீரளவுக்கு ஏற்ப ஒலித்தலைப் போலவும்-ஒரு குறுந்தடியைக் கொண்டு பல்வேறுபட்ட தோற்கருவிகளில் மோதுங்காலும் செம்பு, இரும்பு வெண்கலம் முதலாய உலோகத்தில் மோதுங்காலும் அவ்வொலி மோதிய இடத்தின் சார்பினால் வெவ்வேறுபட ஒலித்தலைப் போலவும் உயிரொலி எவ்வெவ் மெய்யின் பிறப்பிடத்தைப் பற்றி நின்று ஒலிக்கின்றதோ அம்மெய்யின் தன்மை புலப்பட ஒலிக்கும் ஆதலின் உயிரோடு கூடி இசைக்கும் மெய்யின் தன்மை (ஒலி) தோன்றுதலன்றி மாத்திரை பெறுதற்கு ஏதுவில்லை என்பதைத் தெளியலாம்.

அவ்வாறாயின், ''மெய்யின் அளபே அரையென்மொழி'' (நூன்மரபு 11) எனக் கூறியது பொருந்துமோ எனின்? பொருந்தும் எவ்வாறெனின், மெய்யெழுத்துக்கள் ஓர் உயிரின் பின்னர் தோன்றி வருமாயின் அவ் உயிரொலியைச் சார்ந்து மாத்திரை பெறும். அதன் அளவு அரைமாத்திரை அசைகருதி நீட்டி இசைப்பின் அளபெடுத்தும் வரும் ஆதலின் அச்சார்புநிலையில் அது அரைமாத்திரை பெறும் என விதிக்கப்பட்டதென்க. இவ்வாறு உயிரைச் சார்ந்து நிற்கும் மெய்கள் தமக்குப் பின்னர் மெய் எழுத்துக்கள் தொடராத நிலைமையில் இறுதிநிலை மெய்யென்றும் தொடரின் இடைநிலை மெய் என்றும் பெயர்பெறும் அவை அல்-கல்-ஆல்-கால்-புகர்-புகார் எனவும் கொன்றை-கன்னி-காக்கை-வேங்கை-மகிழ்ச்சி-கிடேச்சு என ஈரெழுத்தொருமொழிகளிலும் தொடர்மொழிகளிலும்

செங்கை-பொற்பூ-கண்ணாடி-புளிஞ்சோறு-களாக்கனி எனப் புணர் மொழிகளிலும் வரும்.

இவ்வாறு மெய்யெழுத்து ஓர் உயிரைச்சார்ந்து அதன்பின் தோன்றி அவ்வுயிரே பற்றுக்கோடாக நிற்றலின் முன்னின்ற அவ் வுயிரொலியானது இடையறவுபடாமல் இம்மெய் ஒலித்தற் பொருட்டு அதன்மேல் நீளும். அவ்வுயிரொலியின் நீட்சி இம்மெய்யின் பொருட்டாகலின் அந்நீட்சியை மெய்யின் மாத்திரையாகக் கொள் ளல் மொழியியல் மரபாகின்றது. இவ்வாறு ஒருயிரெழுத்தின் பின் எத்துணை மெய்யெழுத்துக்கள் தொன்றினும் அவ்வளகிற்கு முன் னின்ற உயிரானது தன் இசையை நீட்டிக் கொடுக்கும். அவ்விசை ஒற்றெழுத்துக்கு உரியதாகக் கொள்ளப்பெறும், இயற்றமிழில் இரண்டு ஒற்றுக்களுக்கு மேல் சார்ந்து நில்லா செய்யுளுள் அசை நிறைக்கவும் ஓசை நிரப்பவும் சிறிது நீண்டிசைக்கும். இசைத் தமிழில் தாள அளவைக் கேற்ப நீளும், சில எடுத்துக்காட்டுகளைக் காண்போம்.

சீர்—சீர்த்தி—புகழ்—புகழ்ச்சி இவை இயற்றமிழ் உரைநடை

கண்ண் தண்ணெனக் கண்டும் கேட்டும். இஃது இயற்றமிழ் செய்யுள்நடை ஆதலின் கண்ண்என ணகரமெய் ஒரு மாத்திரை யளவு நீண்டு நேரசையாகின்றது. (கண்ண் = தேமா)

அகர முதல எழுத்◡ தெல்லாமாதி

பகவன்◡ ◡ ◡ முதற்றே யுலகு◡ ◡ — இக்குறட் பாவில் செப்பலோசை நிகழ்தற்காகத் மேலும் அரை மாத்திரை நீளும். ன் மேலும் ஒன்றரை மாத்திரை நீளும் இதனைப் பாவெனி னும் உறுப்புத் தோன்ற ஓதி செவிக்கருவியான் உணர்க. (◡ - மாத்திரையின் அடையாளம்)

உயிரின்பின் வரையறையின்றி எல்லா மெய்களும் வரும் அவ்வாறு வருதல் மொழியாக்கத் தொடர்ச்சியேயன்றி ஒன்றோ டொன்று மயங்கினவல்ல. அதனால் மெய்யோடுமெய் தொடரும் தொடர்ச்சியை மட்டுமே ஆசிரியர் மெய்மயக்கம் எனத் தேர்ந்து உரைப்பாராயினர். இவ்வறிவியலுண்மையை நோக்காத நச்சினார்க் கினியர் எல்லாவற்றையும் மயக்கமெனக் கருதி மயங்கி வல்லுரை கூறினர்.

வல்லெ ழுத்தென்ப கசடதபற
மெல்லெ ழுத்தென்ப ஙஞணநமன
இடையெ ழுத்தென்ப யரலவழள

எனக் கூறிப் பின்னர்,

"அம்மூவாறும் வழங்கியல் மருங்கின்
மெய்ம்மயக் குடனிலை தெரியுங்காலை" எனவும்
மெய்ந்நிலை சுட்டின் எல்லா எழுத்தும்—எனவும்
தம்மியல் கிளப்பின் எல்லா எழுத்தும்
மெய்நிலை மயக்கம் மானமில்லை — எனவும்

ஆசிரியர் மெய்யெழுத்துக்களை மட்டுமே சுட்டிக்கூறியுள்ளமையான் மயக்கம் என்பது மெய்ம்மயக்கம் ஒன்றை மட்டுமே குறிக்கும் என்பதைத் தெளியலாம்.

இனி மெய்ம் மயக்கம் நிகழும் இடம் முதலிய இயல்புகளைக் காண்போம்.

இம்மெய்ம்மயக்கத்தை ஒருமொழி—தொகை மொழி—புணர் மொழி ஆயவற்றுள் இடைக்கண் மட்டுமே வரும் எனக்கொண்டு இதனை இடைநிலை மெய்ம்மயக்கம் என நன்னூலாரும், பின்னூலாராரும் உரையாசிரியன்மார் சிலரும் கூறியுள்ளனர். தொல்காப்பியர் இடைநிலை மயக்கம் என வரைந்து கூறினாரல்லர் என்பதை அவர் கூறியுள்ள மயக்கவிதிபற்றிய நூற்பாக்களை நோக்கின் தெளியலாம்.

இனி நச்சினார்க்கினியரும் அவர் மதம் பற்றிய சிலரும் இம் மயக்கம் ஒருமொழிக்கண்ணதே எனக் கொள்வர். உரையாசிரியர் இதனை ஒருமொழி புணர்மொழி இரண்டற்கும் பொதுவாகக்கொள்வர். ஒருசாரார் கருத்தும் இதுவேயாம். மேலும் உரையாசிரியராகிய இளம்பூரணர் மெய்ம்மயக்கம் பற்றிய விதிகள் மேற் கூறப்பெறும் புணர்ச்சி விதிகளின் ஒருசசார் சுருக்கமே என்பார் இதனை

மெய்ம்மயக்கம் ஒருமொழிக்கும் புணர்மொழிக்கும் பொது
வாகலின் மேற்கூறும் புணர்மொழிச் செய்கையெல்லாம்
தலையாய அறிவினரைநோக்க ஒருவாற்றான் கூறியவா

றாயிற்று என நூன் மரபு 23ஆம் நூற்பா உரையின் வரைந்திருப்பதனால் அறியலாம். நூன்மரபிலும், மொழி மரபிலும் கூறப்பெற்றவை மேல்வரும் செய்கை ஒத்துக்களுக்குக் கருவிகளாதலின் ஒராற்றான் இளம்பூரணரின் கருத்துப் பொருந்தும்.

(தொடரும்)

சி. வை. தாமோதரம் பிள்ளை

சிறுவை. நச்சினார்க்கினியன்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மிகச்சிறந்த புலமை நலம் வாய்ந்த தமிழ் அறிஞர் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள். இவர் பல பாடல்களையும், உரைநடை நூல்களையும் இயற்றியுள்ளார். இவர்களின் பாடல்களும் உரைநடைகளும் சொற் செறிவும், இனிமையும் பொருந்தி விளங்கின என்பர் அறிஞர்கள். தமிழ்மொழியினிடத்தும், இலக்கியத்திலும் கொண்டிருந்த பக்தியாலும் காதலாலும் ஓலைச்சுவடிகளாய் இருந்த பழைய தமிழ் இலக்கண இலக்கிய ஏடுகளைத் தேடிக் கண்டுபிடித்துப் பெருமுயற்சியுடன் அவைகளைப் படித்து, ஆய்ந்து, ஒப்புநோக்கி, பாடவேறுபாட்டுடன், வெளியிட்டுள்ளார்கள், இந்த அரிய தொண்டினைத் தமிழ் மக்களால் என்றும் மறக்க இயலாது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் இராமாநுசக் கவிராயர், ஆறுமுகநாவலர், மயிலை சண்முகம் பிள்ளை, வீராச்சாமி செட்டியார் முதலானோர் போன்று சிறப்புமிக்க பதிப்பாசிரியராய் விளங்கினார்கள் பதிப்புத்துறையில் நாம் அனைவரும் செல்லமாக அழைக்கும் தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே, சாமிநாதய்யர் அவர்களுக்கு முன்னோடியாக விளங்கினார்கள். இவர்களின் அரும் முயற்சியால், நீதிநெறி விளக்கவுரை வீரசோழியம் (181) : இறையனார் அகப்பொருள். தணிகை புராணம் (1883). தொல்காப்பியம், பொருளதிகாரம் (1885); வீரசோழியம், கலித்தொகை (1887); தொல்காப்பியம் சேனாவரையம்:. தொல்காப்பியம் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியம்; இலக்கண விளக்கம் சூளாமணி (1889) முதலிய நூல்களை முதன் முதல் பதிப்பித்தார்கள். இவர்கள் எழுதி வெளியிட்டவை. சூளாமணி வசனம், நட்சத்திர மாலை ஆதியாகம கீர்த்தனம் முதலியன குறிப்பிடத்தக்கவை. இவர்கள் பதிப்பித்த நூல்களின் பதிப்புரைகளில் எல்லாம் தம் தமிழாசிரியரை வாழ்த்தியுள்ளார்கள்.

கலித்தொகை, இலக்கண விளக்கம் ஆகிய நூற்களுக்குத் திரு. பிள்ளை அவர்கள் எழுதிய முன்னுரைகள் மிகச்சிறந்த ஆராய்ச்சிக் குறிப்புகளை உடையன. பதினென் கீழ்க்கணக்குப்பற்றிக் கூறும் ஒரு பாடலில் வரும் முப்பால் என்பது திருக்குறள் அல்ல என்றும், கோவை என்பது வேறு எனவும் அது மாணிக்கவாசக சுவாமிகள் இயற்றிய திருக்சிற்றம்பலக் கோவை அல்ல என்றும் ஆராய்கிறார். திருக்குறளும், கோவையும், தமிழர்களுக்கு வேதம் போன்றவை அவைகளைக் கீழ்க்கணக்கில் சேர்ப்பது தக்கதன்று என அறிவுறுத்துகிறார்கள் திரு. பிள்ளை அவர்கள்,

தமிழ்ச்சுவடிகளைத் தேடி அலைகளைப் பதிப்பித்துத் தந்தபோது அக்காலத்தில் பாராட்டுதலுக்குப் பதில் வசவுகள் கிடைத்தன. ஆங்கிலம் கற்ற தமிழர்களோ உதாசீனப்படுத்தினர். தமிழ் கற்றவர்களே பொறுமை அடைந்தனர். நூல்களைப் பதிப்பிக்கும்போது விளங்காத இடங்களுக்கு விளக்கம் கேட்டுக்கடிதங்கள் எழுதினால் உரிய விடைகள் கிடைக்காது வருந்திய நாட்கள் பல ......

திரு. தாமோதரனார் அவர்கள் சைவ சமயத்தில் ஆழ்ந்த பற்றுடையவர்கள். இவர் "சைவ மகத்துவம்" என்ற நூல் இயற்றினார்கள் இந்நூலுக்கு மறுப்புரையாகக் கிறித்து சமயத்தைச் சார்ந்த அருளம்பல முதலியார் "சைவ மகத்துவ திக்காரம்" என்று எழுதினார்கள் இதற்கு ஒரு மறுப்பு நூலாக "சைவ மகத்து திக்கார நிக்கிரகம்" என்ற நூல் வெளிவந்தது திரு பிள்ளை அவர்கள் பிறந்த ஊரான யாழ்ப்பானத்து ஏழாலை எனும் ஊரில் "சைவப் பிரகாச வித்யாசாலை" என்ற தமிழ்ப் பாடசாலையைத் தோற்றுவித்தார் "திராவிட பிரகாசிகை" எனும் இதழுக்குக் கட்டுரைகள் எழுதி வந்தார்.

இவர்கள் ஏடுகளைப் பார்வையிட்டு ஆய்ந்து பதிப்பித்தபோது ஏட்டுச்சுவடிகளின் நிலைமைகளைக் கீழ்க்கண்டவாறு தாம் பதிப்பித்த கலித்தொகை பதிப்புரையில் கூறுகின்றார்.

> "என் சிறு பிராயத்தில் என் தந்தையார் எனக்குக் கற்பித்த சில நூல்கள் இப்போது தமிழ்நாடெங்கும் தேடியும் அகப்படவில்லை. ஒட்டித் தப்பியிருக்கும் புத்தகங்களும் கெட்டுச் சிதைந்துக் கிடக்கும் நிலைமையைத் தொட்டுப் பார்த்தவர்களுக்கன்றோ தெரியவரும்; ஏடு எடுக்கும்போது ஓரம் சொரிகிறது கட்டு அவிழ்க்கும்போது இதழ் முறிகிறது. ஏட்டைப் புரட்டும்போது துண்டு துண்டாகப் பறக்கிறது. இனி எழுத்துக்களோவென்றால் வாலுந் தலையுமின்றி நாலுபுறமும் பாணக்கலப்பை மறுத்து மறுத்து உழுது கிடக்கின்றது."

அக்காலத்தில் ஏட்டுச் சுவடிகளில் நீருக்கும் நெருப்புக்கும் இரையானவை போக எஞ்சியவை செல்லினால் அரிக்கப்பட்டும் பாழாயின. அப்படித் தப்பிய நூல்களே 19. ஆம் நூற்றாண்டில் சிலரால் பதிப்பிக்கப் பெற்றன ஒருவேளை 16 ஆம் நூற்றாண்டிலேயே ஏட்டுச் சுவடிகளைப் பதிப்பித்திருந்தால் மேலும் பல நூல்கள் தமிழகத்திற்குக் கிடைத்திருக்கும். 16லிருந்து 19 ஆம் நூற்றாண்டுவரை உள்ள இந்த இடைக்காலத்தில் தான் பலநூல்கள் மறைந்துபோயின என்பர் அறிஞர்கள். ஆராய்ச்சி அறிஞர் மயிலை சீனி. வேங்கிடசாமியும் இக்கருத்தே கொள்கிறார்.

பாடலாசிரியராய், உரைநடை நூலாசிரியராய், பதிப்பாசிரியராய், ஆராய்ச்சியாளராய் விளங்கிய இவர் யாழ்ப்பாணத்து ஏழாலை எனும் ஊரினர். 1832 செப்டம்பர் 12 ஆம் நாள் வைரவநாதப் பிள்ளைக்கும் பெருந்தேவி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார்கள், இளமையில் யாழ்ப்பாணத்தில் சிறந்த புலமை நலம் வாய்க்கப்பெற்ற சுன்னாகம் முத்துக்குமாரக் கவிராயர் அவர்களிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைக் கற்றார். அக்காலத்தில் இவர் இருந்த சூழ்நிலையில் அங்கிருந்த கிறித்து சங்கம் மூலமாகவே கல்வி கற்க ஏதுவாயிற்று. ஆகவே கிறித்து சங்கம் சார்புடையவராகவே இருந்து கல்வி பயிலலானார்கள்.

பின்னர் யாழ்ப்பானத்தில் உள்ள கல்லூரி ஒன்றில் சேர்ந்து பயின்றார். பின்னர் 1852இல் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் ஆசிரியரானார். பிறகு சென்னையில் குடியேறினார்கள், "தின வர்த்தமானி" எனும் வார இதழுக்கு 1855இல் ஆசிரியரானார். இவ்விதழினைப் பெர்சிவல் பாதிரியார் அவர்கள் நடத்தி வந்தார்கள். அவருக்குப்பின் பிள்ளை அவர்கள் ஆசிரியரானார்கள். அக்காலத்தில் முதன்முதலாக செய்திகளை வெளியிட்ட இதழ் இதுவேயாகும். செய்திகள், இலக்கியம், அறிவியல் பற்றிய கட்டுரைகள் இதில் இடம் பெற்று விளங்கின. இவ்விதழுக்குத் திரு பெர்சிவல் பாதிரியார் ஆசிரியராய் இருக்கும்வரை அரசு ரூ 200/- மானியம் வழங்கி வந்தனர். பின்பு சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ் ஆசிரியரானார்.

1857இல் சென்னைப் பல்கலைக் கழகம் தோன்றியபோது இவர் முதன் முதலாக "பி ஏ" தேர்வில் முதன் முதலாக வெற்றி பெற்றார். இவர் சென்னை அரசு, வரவு செலவு கணக்கு நிலையத்தில் சேர்ந்தார். அந்த மறைத் தலைவரால் பெரிதும் பாராட்டப்பெற்றார். 1871இல் சட்டம் பயின்று "பி எல்" பட்டம் பெற்றார். 1882இல் அரசு பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். இவர் 1887 முதல் 1890வரை புதுக்கோட்டை சமஸ்தானத்தில் நீதிபதியாக இருந்து அறநிலை பிறழாது பணி செய்தார்கள்.

இங்ஙனம் புகழ் வாய்ந்த இவர் 1891இல் சென்னைப் பல்கலைக் கழகக் கலைக்குழு உறுப்பினரானார். தமிழ்ப்பாடத் திட்டக் குழுவின் தலைவராகவும் விளங்கினார்கள். இங்ஙனம் பண்பாலும் அறிவாலும் உயர்நிலை அடைந்த இவருக்கு அக்கால அரசு 1895 ஆம் ஆண்டில் "ராவ்பகதூர்" பட்டம் அளித்துச் சிறப்பித்தது.

திரு தாமோதரனார் அவர்கள் அக்காலத்தில் சிறந்த தமிழ்ப் புலமை நலம்பெற்று விளங்கிய சபாபதி நாவலர், அம்பிகைபாகர்,

கைலாசம் பிள்ளை, கார்த்திகேய புலவர், டாக்டர் உ. வே. சாமி நாதையர், வேதநாயகம் பிள்ளை, பூண்டி அரங்கநாத முதலியார் முதலியவர்களிடம் பெருநட்புடையவராய், விளங்கினர்கள். திரு. வி. க. அவர்கள் இவர்களிடம்பெருமதிப்பு வைத்திருந்தார்கள். ஒருமுறை கடலூர் நாராயணசாமி அவர்கள், சங்க இலக்கியத்தையும், சீவகசிந்தாமணியையும் அடக்க விலைப் பதிப்பாகக் கொண்டுவந்து அப்பதிப்பினைத் திரு. வி. க. அவர்கள் நினைவுக்கு உரியதாக்க நினைத்தார், ஆனால் திரு. வி. க. அவர்கள் அக்குறிப்பினை மறுத்து, திரு. நாராயணசாமி அவர்களின் தந்தையாரின் நினைவுக்கோ, சி. வை. தாமோதரனார் நினைவுக்கோ அர்ப்பணம் செய்யுமாறு கூறினர்கள். அதனால் முதன் முதலில் வந்த மலிவுப் பதிப்பினை ஒரு சிறந்த பதிப்பாசிரியரின் நினைவாகக்கொண்டு வருதல் வேண்டும் என்ற துடிப்பும் நன்றி உணர்வும் பளிச்சிட்டதை நாம் எவ்வாறு போற்றுவது திரு. வி. க. வின் உள்ளப் பண்பு வியந்து மகிழ்தற்கு உரியது.

திரு. வி. க. அவர்கள், தாமோதரனார் மகன் அழகசுந்தரம் எனும் கிங்ஸ்பெரியினிடம் நட்பு பூண்டிருந்தார்கள், இவர் தம் இளமையில் கிறிஸ்து சமயத்தைத் தழுவினர். திரு. கிங்ஸ்பெரி, "நான் ஏன் கிறித்துவன் ஆனேன்" என்ற சிறு சுவடியை எழுதியதாக தெரிகிறது. அச்சுவடியைத் திரு. வி. க. படித்துள்ளார்கள். ரெவரெண்ட் கிங்ஸ்பெரி மெசபட்டோமியா சென்று திரும்பியதும் அவரிடம் நட்புகொண்டதாகத் திரு. வி. க. அவர்கள் தம் வாழ்க்கை வரலாறு நூலில் குறிப்பிடுகிறார். மேலும் திரு. கிங்ஸ்பெரி திருவாசகத்தையும் சுவிசேஷத்தையும் ஒருமைப்படுத்தி வெளியிட்ட கருத்துக்கள் தம் உள்ளத்தைக் கவர்ந்ததாகக் கூறுகிறார் திரு. வி. க. அவர்கள். அக்காலத்தில் திரு. பிள்ளை அவர்களை, கிங்ஸ்பெரி தாமோதரனார் எனவும் வழங்கினர்.

திரு, தாமோதரனார் தமிழ்க்காதலுக்கு மற்றொரு சான்று. கல்லூரியில் தமிழெடுத்துப் படிப்போருக்கும் மதுரை தமிழ்ச் சங்கத்தார் நடத்தியத் தேர்வில் வெற்றிப் பெற்றவர்களுக்குப் பரிசு தருவர். இவர் அப்பரிசில் பெற்றோரை வரவழைத்துப் பாராட்டி மகிழ்வதுண்டு. அவ்வாறு பாராட்டப் பெற்றவர் பரிதிமாற் கலைஞர் எனும் திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் இவருக்கு "திராவிட சாஸ்திரி" என்ற பட்டம் வழங்கி ஊக்குவித்தார்கள் திரு பிள்ளை அவர்கள்.

இவர் 1—1—1901-ல் சென்னையில் இயற்கை எய்தினர்,

இளங்கோவடிகள் தமிழ்க் கழக

42–ஆமாண்டுத் தொடக்க விழா.

திருவள்ளுவராண்டு 2011 ஆடித் திங்கள் 30ஆம் நாள் (14—8—1980) வியாழக்கிழமை பிற்பகல் 4மணியளவில் காந்தைத் தமிழ்ச் சங்கப் பெருமன்றத்தில், இளங்கோவடிகள் தமிழ்க் கழகத்தின் 42ஆம் ஆண்டுத் தொடக்கவிழா தமிழ்த்தாய் வாழ்த்தோடு, தொடக்கம் பெற்றது. விழாத் தொடக்கத்தில், சிறப்புரையாற்ற வந்திருந்த மதுரை காமராசர் பல்கலைக் கழகக் கல்லூரிகள் வளர்ச்சிக்குழுத் தலைவர் திருமிகு. பேராசிரியர் தி. அ. சொக்கலிங்கம் எம். ஏ., எம். லிட்., அவர்களை வரவேற்றுக், கல்லூரி முதல்வர் திருமிகு. பி. விருத்தாசலம் எம். ஏ. அவர்கள், முன்னுரை ஆற்றினார்கள். அவர்தம் வரவேற்புரையில் ஒரு பகுதி:

''...புலவர் நாவில் பொருந்திய குலக் கொடியாம் வையைப் பெரியாறு தழுவும், பெருமைமிகு மதுரையில் — சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தனர் அன்று; இன்று கழகம் வைத்துப், பல்கலைகளும் வளர்க்கின்றனர். அன்று மதுரை தமிழ் வளர்த்தது. இன்று தமிழ் தான் மதுரையை வளர்க்கிறது எனுமாறு திருமிகு பேராசிரியர் சொக்கலிங்கம் அவர்கள் கல்லூரி முதல்வராக இருந்து 'கொள்வோன் கொள்வகை அறிந்து அவன் உளங்கொளக் கொடுக்கும்' பான்மையில் தேர்ந்து சிறந்தது போலே, கல்லூரிகள் வளர்ச்சிக் குழுவில் பங்கேற்றுத் தமிழுக்கும் தொண்டாற்றி வருகிறார்கள் ...''

''......அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு ஐந்துகால் பூன்றிய தூண்' எனும் வான் மறைக் கேற்ப அனைத்துப் பண்புகளும் அனைத்து விளங்கும் சான்றாண்மை மிக்காராய் விளங்கி வருகிறார்கள்... அவர்கள் மதுரையிலே இருந்து வந்திருக்கிறார்கள்...''

''...பாவேந்தன் பாரதிதாசன் பொதியமலை விட்டெழுந்து பூரித்துப் புறப்பட்டுக், கமுகொடு நெடிய தென்னை கமழ்கின்ற சந்தனங்கள்' போன்ற பல்லிடமும் புக்கு, மென்மையாய் இழைந்து வரும்' மேதகு தென்றலைப்பற்றி அருமையாகப் பேசிக் காட்டுவான்... இப்போது வீசப்போவது அந்தப் பொதியத் தென்றல் அல்ல; மதுரைத் தென்றல் 'பொதியில் தென்றல் போலாது, மதுரைத் தென்றல் வந்தது காணீர்' என்று சிலம் பிசைப்பது போலே, மதுரைக்கே உரிய மதுரத் தமிழெடுத்து பேராசிரியர் அவர்கள் உரையாற்ற வந்திருக்கிறார்கள், பெருந்தகையார் அவர்களை வருக வருக என இளங்கோவடிகள் தமிழ்க் கழகத்தின் சார்பில் வரவேற்கிறேன்,

இவ்வண்ணம், நிகழ்ந்த வண்ணம்—திருமிகு. அ. சொக்கலிங்கம் எம். ஏ., எம். லிட்., உரை வண்ணம் நிகழ்த்தினார்கள். அவர்களின் சிறப்புரையில் ஒரு பகுதி;

"தமிழ் தமிழ் என்று வாய்பறை கொட்டுவார் இன்று நிறையவே உள்ளனர். ஆயினும், தமிழ்நாட்டில், தமிழுக்கென்று, அரசாங்கமே ஒரு கல்லூரி நடத்துகிறதா? என்றால் இல்லை. தமிழ் படித்துவிட்டு நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? என்பது கேள்விக்குறி... இதுதான் தமிழ்ப் படித்தவர்களின் அவலநிலை. இத்தகு சூழலிருந்தும், தமிழ் படிக்க வந்துள்ள உங்கள் தியாக உணர்வினை நான் பாராட்டுகிறேன்..."

"புகுமுக வகுப்பில் தமிழை சிறப்புப் பாடமாக எடுத்தால், ஐம்பது ரூபாய் தருகிறார்கள். பட்ட வகுப்பில் நூற்றைம்பது ரூபாய் தருகிறார்கள், இப்படி சில வழிகளில் மொழிக்காதரவாக அரசிருந்தும் நற்பலனேதும் கிட்டவில்லை. தமிழ் வழியாக பீ. ஏ. படிக்கிறவர்களின் எண்ணிக்கை 8 விழுக்காடுகளாகவும், பி.எஸ்.ஸி. படிக்கிறவர்களின் எண்ணிக்கை 7 விழுக்காடுகளாகவும் இருக்கிறதெனில், தமிழ் நெஞ்சங்கள் வருந்தித்தான் ஆகவேண்டும்...என்று வழி பிறக்கும் என்று, காத்திருப்போமாக ..."

"...இந்த நல்ல நேரத்தில் சிறப்புரை என்ற அமைப்பில், கவிச்சக்ரவர்த்தி கம்பனைப் பற்றி, ஒரு சிறிது எண்ணவிழைகிறேன் கம்பன் போராட்டத்திலேயே வளர்ந்த கவிஞன். அவனது காப்பியம் ஒப்பற்ற கவித்துவம் வாய்ந்தது. அவனைப்பற்றித் திரு. வா.வே. சு. அய்யர் அவர்கள் " உலகத்தின் அத்துணை இலக்கியமும் கம்பனின் தலைவாசலில் முடிவைத்துப்பணிய வேண்டும் " என்று குறிப்பிடுகிறார். அவ்வணிந்துரை எத்துணை உண்மை என்பதைக் கம்பராமாயணத்தை தெளியக் கற்றவர்கள் உணரமுடியும்.... "

"...வான்மீகி, சுவைமிக்க பலாக்கனியை, முழுதாக முள்ளோடு ஈந்தான். கம்பனோ, அந்தக் கனியைப்; பிசினகற்றி, மெல்லக்கீறிச் சுளையெடுத்து, அத்தோடு தேனும் வார்த்துக் கொடுத்தான் என்கிறார். நாமக்கல் கவிஞர், 'தேனும் வார்த்தான்' எனில், அஃது அவனாகப் பெய்தது அன்றோ? அந்தத் தனித்துவம் என்ன? அதற்கு ஓர் உதாரணம் காட்ட விழைகிறேன்... மற்ற, இராமாயணக் கவிஞர்கள் எல்லாம், சீதையைக் கொண்டுபோய், இராவணன் சிறையில் அடைத்தார்கள். ஆனால் கம்பன் மட்டுமே சூர்ப்பநகை

மூலம் 'கேட்டமங்கையை' மறக்காமல், அசோக வனத்தில் சிறை வைப்பதற்கு முன்னமே இராவணன் தன் இதயமாம் சிறையில் வைத்தான், என்று காட்டுகிறான்.

"... மயிலுடைச் சாயலாளை வஞ்சியா முன்னம் நீண்ட
எயிலுடை இலங்கை வேந்தன் இதயமாம் சிறையில்
வைத்தான்"

என்று அற்புதமாகச் சொல்வான் இறுதியில் 'வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும்' அழிந்துபட. இராவணன் மாண்டபின், கற்புக் கனலி சீதையை, இராமனின் வில்லாற்றல், அசோகவனத்திலிருந்து மீட்டது என்று மட்டும் கம்பன் சொல்லி யிருந்தால், அது சிறப்பாய்த் தோன்றியிருக்காது. முன்பு, இதயமாம் சிறையில் வைக்கப்பட்ட சீதையையும் மீட்பதன்றோ அறம்? ஆதலின் மண்டோதரியின் புலம்பல் மூலம்'

"கள்ளிருக்கும் மலர்க் கூந்தல் சானகியை
மனச் சிறையில் கரந்த காதல்
உள்ளிருக்கும் எனக் கருதி உட்புகுந்து
தடவியதோ ஒருவன் வாளி?" எனக் கேட்க வைத்து,

இராமனின் அம்பு, இராவணனின் இதயத்துள்ளிருந்த சீதையின் நினைவுகளையும், தடவித் தடவித் துடைத்துப் போக்கிவிட்டே வெளியில் வந்தது எனக் காட்டுவதுதான் கம்பனின் தனித்துவம். 'இது போல் பல இடங்களில் கம்பன் 'தேன் பெய்து' சிறப்புச் செய்திருக்கிறான்...'

— இத்தன்மைத்தாய கம்பமாக்கடலில் பல தனித்துவங்களைச் செம்மையுற விளக்கிச் சிறப்புரையாற்றினார் பேராசிரியர் திரு. சொக்கலிங்கம் அவர்கள் அவர்தம் பேருரைக்குப்பின், மாணாக்கர் தலைவர் திரு. ச. இராசா அவர்கள் நன்றி நவில, நாட்டுப் பண்ணுடன் விழா இனிதே நிறைவுற்றது.

ஆற்றுப்படை இலக்கியம்

K. சோமசுந்தரம் B. A., B. L., தஞ்சை.

(சென்ற இதழ் 114ஆம் பக்கத் தொடர்ச்சி)

முருகுணர்வு உள்ளத்தைக் கிளரச் செய்து, பேரின்ப வெள்ளத்தில் மூழ்கச் செய்யும் பெற்றியது; உள்ளத்தில் உவகையினையெழுப்பி பிற உள்ளங்களையும் ஈர்த்து தன்வயப் படுத்திக்கொள்ளும் தெய்வத் தன்மை யுடையது. முருகு என்பது மணங்கமழ் தெய்வத்து இளநலம் (திரு முருகு 290) மற்றும் இஃது தெய்வத் தன்மை; ஆகு பெயராய் முருகனை உணர்த்தும், (ம. கா. 181) ஈண்டு முருகனை பாட்டுடைத் தலைவனாக திருமுருகாற்றுப்படை கொண்டுள்ளது. மற்றும் 'முருகாற்றுப் படுத்த (243) எனும் தொடர் இப்பாட்டின்கண் உயிர்நாடியான சிறப்பியல்போடு வந்துள்ளமைக் குறித்து. அத்தொடரால் இப்பாடல் முக்கியத்துவமாய் பெயர் பெற்றுத்தலைத் துணியப்படும். முருகாற்றுப்படை யென்பதற்கு முருகன்பால் வீடு பெறுதற்குச் சமைந்தானோர் இரவலனை ஆற்றுப்படுத்தலென்பது பொருளாகக் கொள்க என்பர் நக்சினார்க்கினியர். 'வீடு பெறுவான் சமைந்தான் ஓர் இரவலனை, அவ்வாறு வீடு பெற்றார் ஒருவர் முருகன் உழை ஆற்றுப்படுத்தல் எனப் பொருள் உரைக்க' என்பது பிரிதொரு உரையாசிரியரது விளக்கம்,

அன்பு அருளுணர்ச்சிகளால் எழுந்த ஆற்றுப்படை இலகியத்திற்கு ஒரு திருப்புமுனையாக ஆசிரியர் நக்கீரர் திருமுருகாற்றுப் படையினை அமைத்து, கடவுட்டன்மைகளுக்குரிய தவம், ஞானம், சீலம், நோன்பு செறிவு, அறிவு, அறச்சமயக்பெற்றி ஆகியவைகளுக்கு சிறப்பிடம் அதற்கு அளித்துள்ளார். கேடில்விழுச் செல்வராகிய நக்கீரர்' வீடுபெறும் தகுதியுடையாரொருவரை, விழுமிய பரிசில் பெற'முருகனிடத்தே ஆற்றுப்படுத்துதலைக் கிளக்கும் இப்பாடலில், வீட்டின்ப மெய்துதற்குரிய அன்பு நெறி, அருள் நெறி, மெய்ப்பொருள் அறிவு நெறி ஞானப் பயிற்சி நெறி, முதலாய நுண்ணிய சால்புகளை அமையத் தேக்கி விழுமியது பயக்குமாறு எழிலுற அருளியுள்ளார். மற்றும் தெய்வப் பெற்றி சிறக்குமாறும், ஞான விழுப்பம் பயக்குமாறும் அன்பு அறிவு முதலிய நெறிமுறைகளான் வீட்டின்பம்பெற முருகனிடம் ஆற்றுப்படுத்தலையும், முருகனை ஆற்றுப்படுத்தலையும் இப்பாட்டின்கண் விளக்கியுள்ளார்.

பரிசிலன்வறுமைத் துன்பம், அவல நெஞ்சத்தோடு, இரந்துழலும் இன்னுநிலை, வழி நடைத்துயருடன் தன் இழிநிலையினை வருந்திக்கூறி பரிசிலாகப் பெறும் பொருள் வேட்கை, அறிவு முயற்சிகள் அவிந்து கெட, பிறவி பாழாய்ப் போகும்நிலை முதலியவற்றைக்

காட்டும் ஏனைய ஆற்றுப்படைகள் போலல்லாது, இம் முருகாற்றுப் படையில், பிறவிகடை வாயில் செல்லாச் செல்வத்தையும், என்ஞான்றும் நிலைபெறும் உரிமைக்குரிய பிறவிநலத்தையும், செம்மல் உள்ளத்தையும், நலம்புரிக் கொள்கையும், விரும்பத் தகுந்த இயல்புடன் தழுவுவதற்கேற்ற தகைமையும், பொருளின்பத்து அவா நீங்கும் உணர்வு உள்ளத்தையும், புறம்பிரிந்து உறைதலையும், விடெனப்படும் திருவடிகளைக் காணும் மெய்ஞ்ஞானப் புலமைப்பெற்றியையும் இறவாத் திருவளர் ஆக்கமதனையும் நுட்பமாக உணர்த்தி, சோற்விளங்கு அறிவொளியுடன் அறிவுக்கறிவாய் நின்று, இறைவன் மாசறு காட்சியளித்து அருள்புரியும் தெய்வத்திறனையும் கண்டு கொள்ளப்படும்.

பொதுவாக ஆற்றுப்படைகளில் காணப்படும் ஆற்றுப்படுத்தப் படுவோரது நிலையை விலக்குதல், பரிசில் பெற்ற முறையைக் கூறுதல் என்பன இம் முருகாற்றுப்படையில் குறிக்கப்படாமை கருதத்தக்கது. என்னெனில், அவைகளைப் பற்றி அறுதியிட்டு உறுதி கூறற்கு வரையறையின்மை யெனக. மற்றும் முருகனது வழிப்பாட்டில், வழிபாட்டிற்குரிய தகுதியாய இடமும், தகுதியற்ற இடமும், உயர்வு தாழ்வும் யாதுமிலாது அவ்பொன்றே வேண்டற்பாலதாதலால், முருகனை அன்பர்களிடம் ஆற்றுப்படுத்தலும் முருகனிடம் அன்பர்களை ஆற்றுப்படுத்தலும் ஒன்றேயாம் எனக் கருதப்பட்டது. மற்றும் முருகனை முன்னிலைப்படுத்தித்துதித்து வழிபடும் முறையும், முருகனது அருளைப் பெறும் வழியும், அருள் புரியும் முறையும், முருகனது அருளைப்பெற விழையும் மெய்யுணர்வுடையார் எளிதே கடைப்பிடித்தற்குரிய பொதுமை அறநெறியாகவே கட்டுப்பாடின்றி வயங்குவதாலென்க.

வாழ்வாங்கு வாழ்தலுக்குரிய மெய்ம்முறைகளையும் வாழ்வியலின் தத்துவ கருத்துக்களையும் இத் திருமுருகாற்றுப்படைப் பாட்டு இயற்கைப் பொருள்களோடு சார்த்தி நெறி கோலிக்காட்டும் செவ்வி ஆற்றுப்படை இலக்கிய வரலாற்றிலில்லாத சிறப்புக்கொண்டு எண்ணுந்தோறும் இறும்பூதும் இன்பமும் பயக்கும் பான்மைத்து. இந்நுண்ணிய மெய்ம்முறைகளையும், ஊற்றமாய தத்துவக் கருத்துக்களையும் நன்கு கடைப்பிடித்து உணர்வார் வாழ்வில் தெளிவெய்தி மெய்யின்பம் பெறுவரென்பது உறுதி. சேற்று வயலிலுள்ள தாமரை மலர்களில் மாலைப்போதில் தேனுண்ணும் வண்டின் அரிக்கணம் திளைத்திருக்க, இரவு வந்தவிடத்து, அம்மலர்களின் இதழ்கள் குவிந்து மூடிக்கொள்ள வண்டின் திரள் ஆங்கே துயில்கொண்டு, ஞாயிறு தோன்றிய வைகறையில், கட்டவிழ்ந்த தாமரை மலர்களினின்று வெளியே போந்து, நெய்தல் ஊதி, காமரு சுனைமலர்களில் ஆரவாரித்ததை நக்கீரர் உரைத்து (72—76) வாழுயிர்கள்

அறியாமைச் சேற்றில் படிந்து அகப்புறப் பற்றுகளில் அழுந்திய ஞான்று. முருகனருளால் அவைகளினின்றும் விடுபட்டு முருகனைக் கண்டு, பேரின்பத்தில் திளைத்திருக்கலாமெனும் கருத்தை உய்த்துணர்ந்து கொள்ளுமாறு உவமைமுகத்தால் குறிப்பித்தது தெளிந்து கொள்ளப்படும். மற்றும் பழமுதிர்ச்சோலை மலையுச்சியிலிருந்து தேனும், முற்றின பலாப்பழசுவையும் தன்னிடத்தே கலக்க அரும் பொன்னும், மணியும், ஆரமும், அகிலும் முதலியன உருட்டிக் கொண்டு ஓசைமிக இழிந்து வரும் அருவியின் நறுஞ்சுவை நீரினைப் பருகாது அருவியினை விலங்கினங்கள் யாவும் அஞ்சி ஓடுவதை நக்கீரர் (296—317) கூறுவதிலிருந்து இறைவனது அருள்வெள்ளம் பெருக்கெடுத்து வந்தகாலை, விலங்கு மனமுடையார், அதனைப் பருக ஆற்றாது அஞ்சி ஓடும் நிலையினைக் குறித்துள்ள கருத்தினை உணருமாறு அமைத்து,மற்றும் இறையன்பு கொண்டுள்ளார் அவ்வாறுஇழுமென இழிதரும் அருளரிவியின் பெருவெள்ளத்தை அஞ்சாது அணுகி இறையருளினை யேற்று அகமகிழ்வோடு தப்பாமல் விடு பெறுகரென்ற விருப்பத் தகுந்த இயல்பினை மாட்சி தோன்ற நக்கீரர் சுட்டுவாராயினர்.

பரிசில் பெற சமைந்து நாடி நிற்பாரை பரிசில் பெற்றுர் ஒருவர் ஆற்றுப்படுத்தும் முறைபற்றி எடுத்துக் கூறும் செய்தியே,

... ... செவ்வேற் சேஎய்
சேவடிபடரும் செம்மல் உள்ள மொடு
நலம்புரிகொள்கைப் புலம் புரிந்து உறையும்
செலவு நீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்இசை வாய்ப்ப
இன்னே பெறுதி நீ முன்னிய வினையே (61—66)

நயத்துடன் இன்பமூட்டும் சீர்மைத்து, முன்னிய வீட்டின் பத்துப் பரிசிலைப்பெற அறிவுநெறிபற்றி வழிபடுமாறு. முருகனைநாடி திருப்பரங்குன்றம்' திருச்சீரலைவாய்; திருஆவினன்குடி, திருவேரகம் முதலிய முருகன் எழுந்தருளிய இடங்கள் தோறும் திரண்டு சென்று தொழுதலை நக்கீரர் முதற்கண் குறித்துள்ளார் பின்னர் புதும்பூங் கடம்பமர் கானத்திலும், தென்றல் தவழும் சோலையிலும் மன்றல் கமழும் பொய்கையின் பக்கலிலும், குளம், குன்று யாறு போன்ற இடங்களின் அருகிலும் வாழிடமாகக் கொண்ட மக்கள் முருகனை உயர்ந்த அன்பு நெறியில் விழாவெடுத்து வணங்கி நிற்க, அவர் பால் முருகன் எளியனாய் அருள்புரிய விரைந்து அவ்விடங்களில் முறுவல் செய்து குறுகுவானென்றும், திரிகுவரென்றும்' இயங்குவாரென்றும், நக்கீரர் கூறுவாராயினர். மற்றும் யாவருக் மகிழு

வண்ணமாகவே நாடுமாறு அன்னவரது அன்பாகிய பரிசிலையும் பெற்று மனங்களிப்ப, பேரன்பு பூண்டு ஒழுகும் மக்களது மனத் திருந்த கருத்தினை அறிந்து முடிப்பானென்றும் மொழிவாராயினர். ஈண்டு முருக பக்தி வலையில் ஈடுபட்டாரது உள்ளங்கள் தோறும் முருகன் கோயில்கொண்டு எழுந்தருளியது உணரப்படும். மற்றும் தெய்வம் சான்ற திறலும் பூண்டு, அன்னார் உயிர்க் குணம் இழந்த தன்மையராய் தன்மை ஒன்றாற்றுப் படுத்திக் கொண்டு நிற்பாரி டத்தே முருகன் மெய்ந்நின்ற வித்தகனைத் தோன்றி அன்னாரை மகிழ்ச்சியுறச் செய்வார்; மற்றும் மனமாசகற்றி, புலனைந்தும் ஒருமையுற்று கருவிகரணங்களின் கொட்டம் குலைய, மெய்வண்ண மாக தன்னைக் குறித்து குழுஉக்குரியாக நன்றக்குறவர்களை ப்பாடும் படியாகவும், கை பிணைந்து குரவைக்கூத்து ஆடும்படியாகவும் செய்து மகிழ்ச்சியுறுவார், குரவைக் கூத்தில் தெய்வ சக்தியும் ஆன்ம சக்தியும் ஒருங்கு சேர, தெய்வ மேறுகை எனும் ஆவேசச் சமதை யால் முருகன் ஆன்மாக்கள் மீது ஆவிர்பவித்து வெளிப்படுதல் இயற்கையியல்பு.

உலகம் உவப்ப அறிவின் திறத்தாலும் அன்பின் இயல் பாலும் உலகை இயக்கும் பேராற்றலைக்கொண்ட முருகனைத் தெளிய வைத்தும், அவ்வாறு தெளியப்பட்ட தெய்வத்தைப்பேணும் பணிதல் முறைகளையும் நக்கீரர் ஆற்றுப்படையில் நவின்றுள்ளது அறியப்படும். மற்றும் இவ்வாற்றுப்படை இறை நலத்தையும் மக்க ளுயிர்கள் உய்யும் நெறியினையும் வழிகாட்டிய தோடமையாது இறை நிலையினையும் மக்களுயிர்களின் நியதியினையும், இவ்விரண்டுக்கு முள்ள தொடர்பு பண்பு முதலாயவற்றினையும் விளக்கும் தத்துவம் வாய்ந்துள்ளது. அறிவு நெறியினைத் துணைகொண்டுள்ள மெய்யியல் புலவர்களுக்கும் அறிவை மறைக்கும் மாசு பெரும்பாலும் உள தாகும், அம்மாசு நீக்கப்படுதற்குரியதாயினும், அஃது அறிவினில் தேயாதவாறு மிகவிழிப்பாய் பார்த்துக்கொள்ள வேண்டிய அவசியம் பெரிதும் இன்றியமையாததாகும். ஆனால் பக்தி கலந்த அன்புநெறி அத்தகைய தன்றென உணர்த்தும் நக்கீரர், அந்நெறியில் ஆணவம் அடங்கப் படிந்து இறையுணர்வு வாய்க்கப்பெற, அளப்பருங்காட்சி யின் தெய்வத் தன்மையினையும், அறநெறி பிறழாது மிக்கப் பயன் தரும் ஒழுகலாறுகளையும் புலப்படுத்துகிறார், மற்றும் முருகனது இன் னருளினைக் கண்ணாரக் காணும் நெறியில் நின்றார். நன்னலம் செறிந்த உரிமைப் பேறுடைய ஞானத்தையெய்தும் அனுபவ நிலை யினையும், தெளிவுபடுத்தி விடுகிறார்,

இவ்வாறு ஆற்றுப்படை இலச்சியத்தின் மூலம், மக்கள் இறையுணர்வு கொண்டு தம்பொருட்டு ஆத்மார்த்த பயிற்சியையும்

பெற வேண்டுமென்றும், இறையுணர்வின் மகிழ்ச்சியாலும், பயிற்சியின் ஊக்கத்தாலும், அன்பும் அருளும் உடன் நிகழ சமூகம் சீரும் சிறப்பும் பெறுமென்பதனை படிப்பினையாகக் கொண்டு மக்கள் பழகுமாறு நக்கீரர் வற்புறுத்தியுள்ளார், மற்றும் மக்களுள்ளத்தில், அறமெனும் தெய்வம் திகழ்ந்தால், ஒழுக்கத்தில் அன்பும் அருளும் அழகும் எவ்வாறு செழிக்குமென்பதையும், அதனால் நாட்டில் எத்தகைய வாறு ஒழுங்குமுறையும் அமைதியும் நிலைக்குமென்பதையும் புகட்டி தமிழ் வாழ்வின் நயத்தக்க நாகரீகநுண்மைநிலையினை புலப்படுத்தியுள்ளார், சமயமரபு தத்துவமாகியவற்றினையே, ஆற்றுப்படையின் உட்கோளாக வைத்து, ஆற்றுப்படை இலக்கியத்திற்கு மெருகுகொடுத்து நக்கீரர் அதனை சீர்மைப்படுத்தினாரென்பது உள்ளங்கை நெல்லிக் கனியென விளங்குமெனக. நில்லாவுலகத்திடத்து நிலைபேறுடைய வெய்வப் புகழை வற்புறுத்தும் ஆற்றுப்படை வறுமையிற் செம்மை வாழ்வுடன் வளமையிற் சீர்மை வாழ்வினையும் ஒன்று சேர்த்து இலக்கிய இன்பமளிக்கும் சிறப்பியல்பு வாய்ந்துள்ளது எனவே, அருள் புரியும் இறைபால் வீடுபெறும் பரிசிலுக்காக, அன்புணர்வில் அரும்பும் விழைவுடன் மக்களுயிர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதை உணர்த்தி அன்னார்க்கு ஆக்கம் அளிக்கும் முறையில், ஆற்றுப்படை இலக்கியத்தை நக்கீரர், அன்பின் ஆர்வத்து இலக்கியமாகவும்' அற இலக்கியமாகவும், அறிவு இலக்கியமாகவும், இறையுணர்ச்சி இலக்கியமாகவும், விளங்குமாறு செய்து, அதனை வாழ்க்கை வழிகாட்டியாக வழங்கும்படி அருளியுள்ளார்.

மங்கல மடந்தை — கண்ணகி

சி. கோ. தெய்வநாயகம் M. A., M. Phil., B. Sc.,
Dip-in-Agri., Cert-in-Epi., Cert-in-Ling.,

(சென்ற இதழ் 124-ம் பக்கத் தொடர்ச்சி)

மணமகள் கழுத்தில் மணமகனால் எழுவது தாலியாகும். தாலி கட்டுங்காலத்து மங்கல வாத்தியங்கள் முழங்குதலும் மங்கலப்பண்கள் ஓசையும் எழுதலியல்பு. தாலிகட்டி முடித்ததன் பின்னர் மணமக்கள் தீவலம் வருவது இன்றும் நடக்கும் வைதீகத் திருமணத்தின் சடங்கேயாகும். இத்தகைய வைதீகத் திருமணமே சிலப்பதிகாரக் கண்ணகி—கோவலன் திருமணமுமாகும். இப்போது மங்கல வாழ்த்துப் பாடலின் திருமண நிகழ்ச்சிகளை தொடர்ந்து காண்மின்.

'' அவரை
இருபெரு குரவரு மொருபெரு நாளால்
மணவணி காண மகிழ்ந்தனர் மகிழ்துழி

யானை எருத்தத்து அணியிழையார் மேலிரீஇ
மாநகர்க் கீந்தார் மணம்.

அவ்வழி

முரசியம்பின முருடதிர்ந்தன முறையெழுந்தன
பணிலம் வெண்குடை
அரசெழுந்ததோர் படியெழுந்தன அகலுள் மங்கல
அணியெழுந்து.
மாலைதாழ் சென்னி வயிர மணித் தூணகத்து
நீல விதானத்து நித்திலப்பூப் பந்தர் கீழ்
வானூர் மதியஞ் சகடணைய வானத்துச்
சாலியொரு மீன் தகையாளைக் கோவலன்
மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் செய்வது காண்போர்கள் நோன்பென்னை?.
(மங்: 40—53)

1. கண்ணகி—கோவலன் இவர்களுக்குத் திருமணஞ் செய்து காண இருவர்தம் பெற்றோரும் விழைந்தனர்.
2. நல்லநாள் ஒன்றில் திருமணம் நிகழ்த்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன.
3. யானைப் பிடரியில் மங்கலப் பெண்டிர் அமர்ந்து மண நிகழ்ச்சிக்கு அனைவரையும் வரவேற்று மங்கலப் பொருட்கள் வழங்கினர்.
4. திருமணக் கூட்டத்திடையே, மங்கல நாண் அணிவித்தற் பொருட்டாய நாழிகையில் மங்கல வாச்சியங்களாய முரசுகள் இயம்பின, முருடுகள் அதிர்ந்தன; முறைகூறி வாழ்த்தும் ஒலிகள் விண்ணளாவின், சங்குகள் ஒலித்தன. அரசனே வருகைதந்து கண்ணகியாரின் திருமணத்தினைச் சிறப்பித்தாற் போல வெண்கொற்றக் கொடையும் எழுந்தது.
5. அதுபோதுதான் கண்ணகியின் கழுத்தில் மங்கலவணி எழுந்தது.
6. மார்பினகத்துத் தொங்கும் தாலிகட்டும் நிகழ்ச்சியே ''அகலுள் மங்கலவணி'' எழுந்தது எனக் குறிக்கப்பட்ட நிலையிலேயே கண்ணகி கோவலனுக்கு மனைவியாகிறார்.
7. அடுத்த சடங்காக மாமுது பார்ப்பான் மறைவழி காட்டும் நிகழ்ச்சி கூறப்படுகின்றது.

8. மணமக்கள் அடுத்து தீ வலம் செய்கின்றனர்,

9. அழகிய பெண்கள், நறுமணப் பொருட்களையும்' மலர்களையும், சாந்துகளையும், சுண்ணங்களையும், விளக்குகளையும், கலன்களையும், பாலிகை குடங்களையும் ஏந்திச் சூழ்ந்தனர்.

10. அதுபோது மங்கலப் பெண்டிர் மணமக்களை
''காதலர்ப் பிரியாமல் கவவுக்கை நெகிழாமல் தீதறுக''
என வாழ்த்தினர்.

11. பின் கண்ணகியின் மீது செம்முதுபெண்டிர் சில்மலர்
பெய்து மங்கலக் கட்டிலில் ஏற்றினர்,

இவ்வாறு மணநிகழ்ச்சிகளை அடுத்தடுத்துக் கூறியுள்ள திறத்தினின் மிகத் தெளிவாக இளங்கோவடிகள் தாலிகட்டும் சடங்கினையும், வாச்சிய ஒலிகளின் பெருக்கத்தினையும் கெட்டிமேள ஒலி விரைவுக் கொப்ப முடுகுசந்தத்திலேயே யாத்துள்ளமையினையும், தாலிகட்டும் நிகழ்ச்சிக்குப் பிறகு அமைதியான மங்கலப் பண் ஒலிக்கப்படுதல் போல தீவலர் செய்யும் செயலைப் பாடியுள்ளமையும் அடிகளின் புலமைத்திறத்தின் தனிப்பெரும் சான்றாக விளங்குகின்றன. எனவேதான் மங்கல வாழ்த்துக்காதை என்னுது மங்கல வாழ்த்துப் பாடல் எனத் தலைப்பிட்டு செய்யுளை மயங்கிசைக் கொச்சகத்தால் அடிகள் யாத்துள்ளமையும் நுண்ணறிவாளர் தோய்ந்து எண்ணி எண்ணி இறும்பூதடையக்கூடிய பெருஞ் செல்வமாம்,

முற்றிழை நங்கை

கோவலனைப் பிரிந்து அவலத் தோற்றத்துடன் கண்ணகி கனாத்திறமுரைத்த காதையில் காணப்படுகிருர் கானல்வரியில் மாதவியைப் பிரிந்து வந்து. கண்ணகியினை அடைகின்ருன். இழந்த பொருளை, கண்ணகியின் காற்சிலம்பை முதலாகக்கொண்டு ஈட்டுவன் என்கின்ருன், மதுரை செல்லற்கு உடன் துணையாகக் கண்ணகியினை எழுக என்கின்ருன். அவலத் தோற்றத்தோடு ஆம் அந்திமாலை சிறப்பு செய்காதை குறித்திட்ட

'' அஞ்செஞ்சீறடி அணிசிலம் பொழிய.........
பவள வாணிதல் திலக மிழப்ப ''

மங்கல வணியிற் பிறிதணி மகிழா மல் விளங்கிய கண்ணகியார் எவ்வணம் இருந்தாரோ அவ்வணமே கோவலனுடன் மதுரை வந்துற்ருர். இந்நிலையினையே மாதரி புறஞ்சேரியிறுத்த காதையில்

'' செய்யாக் கோலத்தோடு வந்தீர் '' எனக் கண்ணகியாரை விளித்திடும் சொல்லிற் பெறலாம். மதுரையில் கணவனை

இழந்து மதுரையை அழலூட்டியபின், கொற்றவை வாயிற் பொற்ரெடிகளாம் வளையல்களை உடைக்கின்றார். பின்னர் நெடுவேள் குன்றம் ஏறுகின்றார்.

மங்கல அணியின் மாட்சி

நெடுவேள் குன்றின்மீது பொலம்பூ வேங்கை நலங்கிளர் கொழுநிழல் ஒரு முலை இழந்த திருமா பத்தினியாக விளங்கிய போதும், அவருடலில் இருந்த அணிகலன்களுள் எஞ்சியது தாலியொன்றே. ஏனெனில், கோவலன் பிரிவால், சிலம்பு, மேகலை, குங்குமம், குழைகள், அஞ்சனம், திலகம் முதலியவற்றை இழந்து தாலியொன்றையே ஈடாக அணிந்திருந்தார்,

கோவலனை மதுரையில் இழந்த பிறகோ கைகளிலிருந்த பொற்ரெடிகளும் இல்லாதுபோயின, எஞ்சிய ஒரே அணிகலன் மங்கல அணியொன்றே. அம்மங்கலவணி ஒன்று மட்டுமே விளங்க மலை மீது கண்ணகியார் திருநாடு புக்கார்.

அவரது தெய்விகத் தன்மையினை உணர்ந்த குன்றவர் எந்நாட்டார் கொல்? யார் மகள் கொல்லோ? என வியந்தனர். பின் மங்கல அணி ஒன்றை மட்டும் தவிராது அணிந்து, மங்கலப் பெண்ணாகவே கணவனொடு வானுலகு புக்க கற்பினாற்றல் மிக்க பெண்ணாதலின்

> ''இவள் போலும் நங்குலக்கோர் இருந்தெய்வ மில்லையாதலாற்
> தெய்வங் கொள்ளுமின் ''

என இவரது மங்கலத் தன்மையினை முன்னிட்டு 'மங்கல தேவி' எனவே பெயர்கண்டு கல்லெடுத்து வணங்கி வந்தனர். இஃது காவியரின் வாய்மொழி. இவ்வாய் மொழியே இன்றளவும் மங்கலா தேவிக் கோட்டம் என்ற பெயரில் மேற்குமலைத் தொடரில் விளங்குகின்றதெனலாம்.

விளங்கிய கோலம்

கண்ணகியாரின் படிமத்தினை, சேரன் செங்குட்டுவன் தாலியோடு பல அணிகலன்களையும் அணிந்த நிலையிலேயே சமைப்பித்திருந்தான், இதனை,

> ''கைவினை முற்றிய தெய்வப் படிமத்து
> வித்தக ரியற்றிய விளங்கிய கோலத்து

முற்றிழை நன்கல முழுவதும் பூட்டிப்
பூப்பலி செய்து .... (28 : 228 — 231)

என்ற நடுகற்காதைத் தொடர்களும்,

"பொன்னஞ் சிலம்பிற் புனைமேகலை வளைக்கை
நல்வயிரப் பொற்றோட்டு நாவலம் பொன்னிழைசேர்
மின்னுக்கொடி யொன்று மீவிசும்பிற் றோன்றுமால்!"
(29 : தெரு கூற்று)

என்ற வாழ்த்துக் காதைத் தொடர்களும் தெளிவாக்குகின்றன.

அந்திமாலைச் சிறப்பு செய் காதையில் கண்ணகியார் அணியா திருந்த சிலம்பு, மேகலை, குழை இவற்றையும், கட்டுரைக் காதையில் கொற்றவை வாயிலில் தகர்த்த பொற்றொடிகளையும், அவர் என்றும் இழக்காது அணிந்து சிறந்த மங்கல நாண் (பொன் இழை) (முற்றிழை) என்ற அணியோடு அணிந்த நிலையிலேயே கண்ணகி யாரின் படிமம் விளங்குதல் கண்கூடு.

இக்கருத்திற்கு காட்கிச் சான்றாக, கண்ணகிக் கோட்டத்தில் பேராசிரியர் திரு. சி. கோ. அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இமயக் கல்லால் ஆன கண்ணகியாரின் படிமத்தில் இவ்வணிகலன் கள் (செதுக்கப்) வரைவு செய்யப்பட்டுள்ளமை கண்டு போற்றத் தக்கதாகும்.

கவவுக்கை நெகிழாமல்

"காவிய முறையில் கணவனோடு வானகம் புக்கனர் நங்கை" இதுவே அடிகளும், பதிகமும் செப்புவது ஆம்.

1 "ஒருமுலை இழந்தாளோர் திருமாபத்தினிக்கு
அமரர்க் கரசன் தமர் வந்தீண்டி யவள்
காதற் கொழுநனைக் காட்டி யவளொடெங்
கட்புலங்காண விட்புலம் போயது
இறும்பூது போலும்" (பதி: 5—4)

2 ..."தீக்குற்றம்
உற்றேனோ டுற்ற வுறுவனோ டியானுற்ற
நற்றிறங் கேட்கின் நகையாகும்" (9: 52—54)

3 "அணித்தகு புரிகுழ லாயிழை தன்னொடும்
பிணிப்பறுத் தோர்தம் பெற்றி யெய்யதவும்"
(15: 99—100)

4 "மாறி வருவன் மயங்கா தொழிகென" (16: 63)

5 " காய்சினந் தணிதன்றிக் கணவனைக் கைகூடேன் "
(19 : 70)

6 " வாரொலி கூந்தல் நின் மணமகள் தன்னை
ஈரேழ் நாளகத் தெல்லை நீங்கி
வானோர் தங்கள் வடிவினல்லதை
ஈனோர் வடிவிற் காண்டலில் என (23: 173—176)

7 " கோநகர் பிழைத்த கோவலன் தன்னொடு
வானவூர்தி யேறினள் மாதோ " (23: 198—199)

8 " குன்றவருங் கண்டு நிற்பக் "
கெபழுநனொடுங் கொண்டு போயினர் " (24: 9)

9 " முலையிழந் மாமதுரைக் கோளிழைத்தாள் காதல்
தலைவனை வானோர் தமராருங் கூடிப்
பலர்தொழு பத்தினிக்குக் காட்டிக் கொடுத்த
நிலையொன்று பாடுதும் யாம் "
(24: பாட்டுமடை 5—8)

10 " வைத்தரவல்குல் கணவனை வானோர்கள்
உய்த்துக் கொடுத்தும் உரையோ ஒழியாரே "
(24: பா. மடை 17—19)

11 " கான நறுவேங்கைக் கீழாள் கணவனோடும்
வானக வாழ்க்கை மறுதரவோ இல்லாளே "
(24: பா. மடை21—22)

12 " பொற்றொடி மாதர் கணவன் மணங்காணப்
பெற்றியுடையதிவ் வூர் " (24: பா. மடை 26—27)

13 " வானவர் போற்ற மண்ணொடுங் கூடி
வானவர் போற்ற வானகம் பெற்றனள் "
(25- 59—60)

போன்ற அகச்சான்றுகள் கண்ணகியாரின்
' காதலர்ப் பிரியாத, கவவுக்கை நெகிழாத "
பீடு வாழ்வினைச் சுட்டுவனவாக சிலம்பு முழுதும் காணப் படுகின்றன.

காதலர்ப் பிரியாமல் :

எனவே கண்ணகியார் கனத்திற முறைத்த காதையில் எவ்வாறு கணவனொடு கூடி வாழ்தற்காக மதுரை வந்தாரோ அது போன்றே கட்டுரைக்காதை இறுதியில் நெடுவேற் குன்றத்தில் காதற் கணவருடன் வானக வாழ்க்கை புக்கார். எனவே இழந்த

(தொடரும்)